வழங்குவது என்பதும், பெரியார் பாசனப் பகுதியாக மாற்றுவது என்பதும் இயலாத ஒன்றாகும். அவ்வாறு செய்தால், பெரியார் பாசன விவசாயிகளிடமிருந்து எதிர்ப்புகள் உருவாகும். சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகளும் உருவாகும். எனவே, இக்கோரிக்கை சாத்தியமானது அல்ல என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமங்கலம் பிரதானக் கால்வாயிலிருந்து பல்வேறு கிராமங்களுக்கு புதிய கால்வாய் வெட்டுவதற்காக இங்கு கோரி இருக்கின்றார்கள். மதுரை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவருக்கு அவருடைய ஒத்திசைவு கேட்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒத்திசைவு கிடைக்கப் பெற்றவுடன் அரசு அப்பணியை எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 352, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

352—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***18601—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் கிராமத்தில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.*

வினா எண் 353, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.